நகல்

உ

குணம்பொருந்திய கல்விக்கடலாகிய ஐய
ரவர்களுக்கு

தங்கள்பால் மிகுந்த அன்புள்ளவனாகிய செண்பகக்குத்தாலமெழுதிக் கொண்ட விஞ்ஞாபனம். இங்குள்ளார் யாவரும் க்ஷேமம் அங்குள்ளார் க்ஷேமத்துக்கு எழுதியனுப்பிவைக்கவேண்டும்.

தாங்கள் முன்னெழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. பதிலெழுதக் காலமில்லாமற் போய்விட்டது. பின்னர் சு-உ அனுப்பிய கடிதம் திருநெல்வேலியிலிருந்து தாமசித்து இன்று காலையில் மகாசந்நிதானத்தில் கட்டளையிட்டருளிய திருமுகத்தோடும் வந்து சேர்ந்தது. அதிற் கண்டபடி பாட்டுக்களை அவசரமாக்கு எழுதியனுப்பியிருக்கிறேன். அதை நன்றாய்ச் சீர்திருத்தி மகாசந்நிதானத்தினிடத்தில் விண்ணப்பஞ் செய்ய வேண்டுமென்று நிரம்பவுங் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எனக்கு நாலு தினமாக வாயு உபத்திரவமாயிருப்பதால் சு-உ வருவதற்குத் தடையாயிற்று. வீட்டுக்கெளியில் போகக்கூடாதென்று கட்டாயமாய்ச் சொல்லுகிறார்கள். ~~[illegible]~~ நான் எவ்விதமும் இன்னமொருவாரத்திற்குள் புறப்பட்டு வருவதாயிருக்கிறேன். மற்றவைகளை பின்னர் விவரமாகத் தெரியப்படுத்திக் கொள்வேன். ஆணையினை வேணும்

தங்கள் நேயன்
சண்பகக்குற்றாலம்

ஸ்ரீ
நிம்பரவி. மிங. 2
மேலகரம்

பாடல் எழுதுமையவல்லி

1. புகழ்பூத்த நான்முனிவர் பொருட்டாய்முன் மொழி
குரவு பூண்டு தேர்அற்
றிகழ்பூத்த மலைந்துமித் தெவ்வுயர்க்கு மின்பமருளிய
விவ்வல்கிற் போந்தோன்
நிகழ்பூத்த வடியாக மிருணீக்கிக் குடியிருக்கு நிமலன்
சீர்த்தி
திகழ்பூத்த துறைசையாற் சுப்பிரமணிய தேசிக
காமணிக்கு

நகல்



இசையுறுஞ்சீர்க் கருணையினற் பொறைதுறவாற்
றனக்கொப்போ ரில்லான் வானின்
மிசையுறுங்கற் பகநாணக் கவிவாணர்க் குதவியவர்
மிடிகெ டீர்ப்போன்
நசையுறும்பல் லறங்களெலாங் காசினியி ற்றலங்க
ளெலா நடத்துவோனென்ன
திசையுறுஞ்சீர்ப் பனசையின்வா ழிராமலிங்க முனிவரனே
செயசிங் கேறு

தகையார்மும் மணிக்கோவை புலவருவப்புற
அருற்றிச் சார்த்துகென்ன
வகையாரவ் விதமுருற்றிச் சார்த்தினனேல்
வடகலைதென் கலையாம் வாரி
நகையார்தன் ஞானத்தடக்கிக் குருமுனியாற் பெருமையுற்றோ
னயமோம் பல்ல
தொகையாரெக் குணமுமுறும் பரமசிவ முனிவரன்மெய்த்
துறவ ரேறே

புயல்பொழியுந் தண்டுறைசையிற்சுப் பிரமணிய குருபரனும்
புகழ்ச்சால்வள் ளற்
இயல்பொழியு மோர்ப்பதிக மூவர்சொலும் பதிகமதி
னினிதாச் சொற்றன்
செயல்பொழியுந் தென்மொழியும் வடமொழியும் வரம்பு
கண்ட திறன் சென்னைக்
கயல்பொழியும் வயற்பனசைப் பரமசிவ முனிவரனேங்
கவிவல் லோனே

நகல்

கும்பரவி 13. சண்பகக் குற்றாலம்.

அசல் - நகல் - 1

சண்பகக்குற்றாலக்கவிராயர்.

மும்மணிக்கோவைச்
சிறப்புப் பாயிரம்.

2224

(3)